# உனக்கென ஒரு வெண்பா

– வித்யா சிதம்பரம்



Copyright © 2020, Vithya Chithamparam
All rights reserved.

No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without permission in writing from the publisher, except by a reviewer who wishes to quote brief passages in connection with a review written for inclusion in a magazine, newspaper or broadcast.

Published in India by Prowess Publishing,
YRK Towers, Thadikara Swamy Koil St, Alandur,
Chennai, Tamil Nadu 600016

ISBN: 978-81-945278-4-8
eISBN: 978-81-945278-6-2

Library of Congress Cataloging in Publication

என் எல்லா
பிறவியிலும்
நீயே வேண்டும்,
நீ தரும் அந்த வலி வேண்டும்,
கை கோர்க்கும் கணவனாக அல்ல!
என் கருவறையை
உதைக்கும் குழந்தையாக...!

❤ ❤ ❤

பாடல்கள் பிடித்தது
உன்னை பார்த்த பின்...
தேடல்கள் பிடித்தது
உன்னை தெரிந்த பின்...
காத்திருக்க பிடித்தது
உன்னை காதலித்த பின்...
வாழ்க்கையும் பிடிக்கும்
உன் வருகைக்கு பின்...
வா அன்பே எனக்காக
வாழ்வோம் நமக்காக....!!!!!

❤ ❤ ❤

எனக்கா?
என் தமிழுக்கா?
இதிலுமா பந்தயம்...?
உயிர் என்ன?
மெய் என்ன?
உள்ளதெல்லாம் நீயே!!

❤ ❤ ❤

சட்டை பிடித்து
சாய்ந்து அழுது
சஞ்சலிக்கும் உலகம் மறந்து
சரண் அடைந்து விட
ஆசை தான் எனக்கும்

❤ ❤ ❤

நான் வேஷக்காரியாம்
அவனுக்கு....
ஆம்...
நான் இட்ட வேஷம் எல்லாம்
அவனை என் நண்பன் என்றதே...!

❤ ❤ ❤

உனதென்றும்
எனதென்றும்
ஏதுமில்லை
நமதென்னும்
நாள் ஒன்றும்
தூரம் இல்லை

நாணம் கொள்ளும்
நகங்கள் கூட...
நகரும் நாட்கள்
நரைத்திடும் வரை...
உன்னுடன்...!

❤ ❤ ❤

தொலைந்து ஏனும் போ
தேடாமல் இருப்பேன்...!
புறக்கணிக்க வேனும் செய்
பின் வர மாட்டேன்...!
உடன் இருந்து
உயிர் கொன்றால்???

❤ ❤ ❤

நெடுந்தூர
பயணங்கள்
நீளமாக
தோன்றியதே இல்லை
அப்போது...!
நொடிகள் கூட
நீண்டு கொண்டே....
நிலை குலைக்கிறது
இப்போது...!

❤ ❤ ❤

விட்டு கொடுத்தல்
விடாமல் இருத்தல்

கவிதை கிறுக்கல்
காத்திருத்தல்
ஏங்கி இளைத்தல்
ஏற்றல் இகழ்தல்
இத்தனையுமாய்
காதல்....!
அழைத்திட்ட “டேய்” யின்
முடிவில் அருகில்
எல்லாமுமாய் நட்பு...

❤ ❤ ❤

குழந்தையாக மாறிய உணர்வு,
என் விரல் இடைவெளிகளில்
உன் விரல் நிறைந்த போது...!
என் கண்ணின் ஈரம்
உன் தீண்டலில் காய்ந்த போது...!
என் மீதி உணவு
உன்னால் தீர்ந்த போது...!
என் இரவுகள்
உன் மடியில் முடிந்த போது...
இத்தனையும் கனவென்று
கதறி அழுத போது...!

❤ ❤ ❤

நினைத்து நினைத்து
நினைவிழந்து போக...
உருகி உருகி
உயிரற்று போக...

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: https://store.prowesspub.com**